ஒப்பிட்டுப் பார்க்கிறபோது தனியார் துறையைவிட, மற்ற மாநிலங்களைவிட குறைந்த விலைக்குத்தான் பால் உற்பத்தியாளர்களுக்குத் தீவனம் வழங்கப்படுகிறது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

11—

காவலர் குடியிருப்பு

***45066—திரு. எம். அன்பழகன்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, பழனி நகரில் காவலர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2008-2009 ஆம் ஆண்டில் பழனி நகரில் பணிபுரியும் காவலர்களுக்கு 32 புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசாணை 18-11-2008-ல் வெளியிடப்பட்டுள்ளது. இதன் கட்டுமானப் பணி தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.*

திரு. எம். அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி தொகுதிக்கு கடந்த 4½ ஆண்டுகளில் பழனி நகரக் காவல் நிலையத்தை முதல்தர காவல் நிலையமாகத் தரம் உயர்த்தி, புதிய கட்டடம் கட்ட ரூ.35 இலட்சம் வழங்கி, தற்போது பணிகள் முடிக்கப்பட்டு திறக்கப்படும் நிலையில் உள்ளது. தாலுகா காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட ரூ.42 இலட்சம் அனுமதி வழங்கி கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

2010 நவம்பர் 10]

சாமிநாதபுரம் காவல் நிலையத்திற்கும் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பழனி நகரத்தில் ஒட்டுமொத்தமாக ஓட்டு வீடுகளாக இருந்த காவலர் குடியிருப்பை இடித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் தற்போது அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அந்தப் பணிகள் நடைபெற்று வருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழறிஞர், என் பாசத்திற்குரிய தலைவர் அவர்களுக்கு எனது சார்பிலும், பழனி தொகுதி மக்களின் சார்பிலும் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவலர்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டதாகத் தெரிவித்தார்கள். அப்பணி எப்போது முடிவடையும் என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: இந்தப் பணி 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இவற்றில் 2 பிரிவுகளில் முதல் தளக் கூரை, கற்காரை அமைக்கும் பணி முடிவடைந்து விட்டது. மீதம் உள்ள 2 பிரிவுகளில் முதல் தளக் கூரை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மொத்தத்தில் இந்தக் கட்டுமானப் பணிகளை வருகிற மார்ச் 2011-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களுக்காக 3 கமிஷன்களை அமைத்து, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றியவர் முதல்வர் அவர்கள். காவலர்கள் மத்தியில் சிறிய மனத்தாங்கல் உள்ளது. அதையும் கனிவுடன் பரிசீலித்து, அதனைக் களைய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். காவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் குடியிருப்புகளின் பரப்பளவு போதுமானதாக இல்லையென்ற குறை உள்ளது. அதைக் களைய அரசு ஆவன செய்யுமா என்பதைக் கேட்டுக்கொண்டு, பழனி நகரத்தில் 32 குடியிருப்புகள் மட்டுமே கட்டப்பட்டு வருகின்றன. பழனியும், அதனைச் சுற்றியும் 9

காவல் நிலையங்கள் உள்ளன. அவற்றில் 9 ஆய்வாளர்கள், 20 துணை ஆய்வாளர்கள், 200 காவலர்கள் உள்ளார்கள். எனவே, காவலர்களுக்கு பழனியில் மேலும் ஓர் அடுக்குமாடிக் கட்டடம் அமைத்துத்தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி ஆராய்ந்து பின்னர் முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், ஐந்தாவது முறையாக பொறுப்பேற்று, சிறப்பாக ஆட்சி செய்து வருகின்ற இந்தக் கால கட்டத்தில், தமிழ்நாட்டில் இதுவரை காவலர்களுக்காக எத்தனைக் குடியிருப்புகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற மொத்தம் உள்ள காவல் பணியாளர்களின் எண்ணிக்கை 1,04,783 ஆகும். தற்போது, மொத்தம் 45,847 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, அந்தப் பணியாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திற்குட்பட்ட மேட்டூர் நகரில் காவலர்களுக்கு குடியிருப்பு இல்லை என்ற கோரிக்கை இருக்கிறது. அதையும்

2010 நவம்பர் 10]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதோடு, மேட்டூர் காவல் நிலையம் என்பது பழமையான காவல் நிலையம்; நீண்ட கால காவல் நிலையம்; வெள்ளைக்காரர்கள் காலத்தில் கட்டப்பட்ட, ஓட்டுக் கட்டடத்தில் குறுகிய இடத்திலே இயங்கிவருகின்ற காரணத்தினாலே, இதே சட்டமன்றத்திலே நான் இரண்டு முறை கேட்ட நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே காவல் நிலையக் கட்டடம் கட்டப்படும் என்ற அறிவிப்பை அறிவித்தார்கள். இன்னும் தொடங்கப்படவில்லை. ஆகவே, நடப்பாண்டில் மேட்டூர் வட்டக் காவல் நிலையக் கட்டடம் கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேட்டூர் அணைதான் தமிழ்நாட்டினுடைய வாழ்வாதாரத்தைக் கொடுக்கின்ற தஞ்சைத் தரணியை உருவாக்குகின்ற உயிர்நாடி அணையாக இருந்து வருகிறது. அதற்கு பாதுகாப்பு கருதி, அணை நிரந்தரமாகப் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில், காவலர்கள் வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்துவருகிறது; நானும் வலியுறுத்தி வந்திருக்கின்றேன். ஆகவே, ஒரு அணி (Battalion) மேட்டூர் அணையின் பாதுகாப்பிற்காக ஒதுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணையைப் பாதுகாப்பது என்பது காவலர்களால் மாத்திரம் முடிகின்ற காரியமல்ல. அதற்குரிய விதிமுறைகள், சட்டங்கள், அணுகுமுறைகள் இவைகள் அனைத்தும் சேர்ந்துதான் மேட்டூர் அணையானாலும் அல்லது எந்த அணையானாலும் அவற்றைப் பாதுகாக்க முடியும். மேட்டூர் அணைப் பகுதியிலே எந்தவிதமான கலவரமும் கிடையாது. ஆகவே, அங்கே காவலர்கள் இருக்க வேண்டிய அவசியமில்லை. அணையைப் பாதுகாக்க அணையினுடைய பயன்பாட்டை யாரும் பாழ்படுத்திவிடாமல் தடுத்து நிறுத்த, காவலர்கள் தேவையே தவிர, மேட்டூர் அணையைப் பாதுகாப்பதற்கு காவலர்களால் முடியாது. நாட்டை ஆள்கின்றவர்களால்தான் முடியும்; நம்மால் முடியும்.

[2010 நவம்பர் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்திலே எத்தனை காவலர்கள் இருக்கின்றார்கள் என்ற கணக்கினை இங்கே சொன்னார்கள். தமிழகத்தில் மேலும் கூடுதலாக காவலர்களுடைய எண்ணிக்கை தேவைப்படுவதாக நான் அறிகின்றேன். பல காவல் நிலையங்களிலே போதுமான அளவிலே காவலர்கள் எண்ணிக்கை இல்லை. அதன் காரணமாக அவர்களுக்குப் பணிச்சுமை ஏற்படுகிறது. ஆகவே, கூடுதலாக காவலர்களை தேர்வு செய்வதற்கும், கூடுதலாக பணியாளர்களை நியமனம் செய்வதற்குமான முயற்சியை மேற்கொள்ள அரசுக்கு உத்தேசம் இருக்கின்றதா? அதேபோல, காவலர்கள் பணியில் ஈடுபடுகின்றபோது அவர்களுக்கு மனதிற்கான புத்தாக்கப் பயிற்சி தேவைப்படுகிறது. அவர்களுக்கு விடுமுறை என்பதே இல்லை என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, வாரம் ஒரு நாளாவது அல்லது அரை நாளாவது அவர்களுக்கு விடுமுறை விடுவதன் மூலமாக அவர்களின மன நிலையை சரி செய்துகொள்வதற்கு ஏதுவாக இருக்கும். அவர்கள் குடும்பத்தோடு, குழந்தைகளோடு பொழுதைக் கழிப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தி, அவர்கள் மன நிலையில் சில மாறுதல்கள் ஏற்படுத்தி, அதன்மூலமாக நாட்டிற்கு நற்பயன் ஏற்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படவேண்டும். அதைச் செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களை எந்த அளவிற்கு கம்யூனிஸ்டு கட்சி நண்பர்கள் 'தாக்கி'ப் பேசுவார்களோ; அந்தளவிற்கு இன்றைக்குத் 'தாங்கி'ப் பேசியிருக்கின்றார்கள். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய வசதி, வாய்ப்பு, எண்ணிக்கைப் பெருக்கம்— இவைகளைப் பற்றியெல்லாம் அரசு ஆலோசித்துக்

2010 நவம்பர் 10]

கொண்டிருக்கிறது. வெகு விரைவிலே காவலர்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு அந்தக் காவலர்களுக்கான வசதிகள் சீர்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் எதிர்க்கட்சி துணைத் தலைவர் என்ன சொல்லுங்கள்? Gist-ஐ மட்டும் சொல்லுங்கள் என்ன matter என்று முதலில் சொல்லுங்கள்.

திரு. ஒ. பன்னீர்செல்வம்: காலையில் உங்கள் அறையில் வந்து கொறடா சொன்னதுதான். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்ற . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சி துணைத் தலைவர், இதுசம்பந்தமாக எனக்கு யாரும் தகவல் கொடுக்கவில்லை. அதை முதலில் தெரிந்துகொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) Gist-ஐ மாத்திரம் சொல்லுங்கள். திரு. செங்கோட்டையன்.

(ஆ) கரும்பு, பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி விவசாயிகள் போராட்டம்

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பாக இன்று சென்னை மாநகரத்தில் சட்டமன்றத்தின்முன் விவசாயிகள் மறியல் பேரணி நடைபெறும் என்று வேண்டுகோள் வைத்து, அது மாற்றியமைக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின்முன் அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.